ஆர்ப்பாட்டக்களங்களில் தமிழ் மொழிநடைப் பிரயோகங்கள் - பதாகை வாசகங்களை மையப்படுத்திய சமுதாயமொழியியல் ஆய்வு

ஷிறோமி மோகன்
shiromimohan@univ.jfn.ac.lk

ஆய்வுச்சுருக்கம்

மொழி என்பது கருத்துப்பரிமாற்றக் கருவியாக கற்றல் - கற்பித்தல் என்கின்ற தளத்திலிருந்து சமூகப்பயன்பாட்டுத் தளத்திற்கு செல்கின்ற பொழுது அதன் யதார்த்தமான பிரயோகங்களானவை சமூகச்சூழ்நிலைகளின் அடிப்படையில் மாறுபடுகின்றன. அந்த வகையில் இலங்கை மக்களால் 2022 பங்குனிமாதக்காலப்பகுதியில் பொருளாதார நெருக்கடிகளுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டக்களங்களில் தாம் பேசும் மொழியின் வாயிலாக உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கென கையிலேந்தியவாறு காட்சிப்படுத்திய பதாகைகளில் தமிழ் மொழியில் கட்டமைக்கப்பட்ட பல்வேறு மொழிநடைப் பிரயோகங்களானவை இலங்கைச் சமூகத்தினரது சமுதாயச் சிக்கல்களையும், மக்களது வாழ்வியலுக்கான சவால்களையும் நன்கே வெளிப்படுத்தியுள்ளன. இதன்படி, இவ்வாய்வானது ஆர்ப்பாட்டக்களத்தில் காட்சிப்படுத்தப்பட்ட பதாகைகளில் தமிழ் மொழிநடைப் பிரயோகங்களை சமூதாய-மொழியியல் கண்ணோட்டத்துடன் அணுகி தற்கால தமிழ் சமூகத்தின் தமிழ் மொழிநடைக்கட்டமைப்பு விதங்களை வகைப்படுத்தி அடையாளப்படுத்துதல் என்பதனை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், பதாகைகளின் மொழிநடைகள் ஊடாக வெளிப்படும் சமுதாய மொழியியல் மனப்பாங்குகளை மொழியியலின் பயனாக்க அடையாளக் கோட்பாட்டின் படி ஆராய்ந்து வெளிப்படுத்துதல் என்பதை துணை நோக்கமாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தவகையில் நோக்கத்தின் அடிப்படையிலான தரவு சேகரிப்பு முறையின் அடிப்படையில் ஆர்ப்பாட்டக்களத்தில் காட்சிப்படுத்தப்பட்ட 50 பதாகைகளின் புகைப் படப்பிரதிகள் இணையத்தள பக்கங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக்கொண்டு அவற்றில் எழுதப்பட்டிருந்த வாசகங்களின் ஊடாக மொழித்தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே வெளிவந்த இவ்வாய்வுடன் தொடர்புபட்ட ஆய்வுக்கட்டுரைகள், தமிழ் இலக்கண நூல்கள், சமுதாய - மொழியியல் நூல்கள், இணையத்தள செய்திகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்விற்கான பின்னணித்தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதன்படி 12 வகையான சமுதாய - மொழியியல் தொடர்பினை வெளிப்படுத்தும் மொழிநடைக்கட்டமைப்புகள் தமிழ் எழுத் திலக்கண விதிமுறைகளின்படி ஆராயப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டிருப்பதுடன் பயனாக்க அடையாளக்கோட்பாட்டின்படி ஆர்ப்பாட்டத்தின் மையதொனிப்பொருளுடன் தொடர்புபட்ட மேலதிக 3 வகையான தொனிப்பொருள்கள் கண்டறியப்பட்டு உள்ளடக்கப் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வில் சமூகம் சார்ந்த நெகிழ்ச்சிப்போக்கினை அனுசரித்த, தமிழ் மொழியின் எழுத்திலக்கண கட்டமைப்புகளைப் பதிவு செய்து அவை வெளிப்படுத்தும் சமூக மனப்பாங்கினை ஆய்வுக்குட்படுத்தியதன் மூலம் தமிழ்மொழி பேசும் சமூகத்தினது சமுதாயமொழியியற்பாற்பட்ட கூட்டிணைவினைவுகளையும் சூழ்நிலைக்கேற்ற வேறுபட்ட வெளிப்பாடுகளையும் நிறுவி ஆவணப்படுத்த முடிந்துள்ளது.

திறவுச் சொற்கள்: மொழிநடை, சமுதாயமொழியியல் மனப்பாங்கு, ஆர்ப்பாட்ட மொழி வழக்கு, பயனாக்க அடையாளக்கோட்பாடு

ஆய்வின் அறிமுகம்

மொழி என்பது ஒரு தொடர்பாடல் கருவி என்ற அடிப்படையில் அம்மொழி பேசப் படும் சமுதாயத்தின் அடையாளமாக செயற் படுகின்றது. மொழியானது சமுதாயத்தில் வாழும் மனித இனத்தின் முன்னேற்றம், வரலாறு, வாழ்வியல், பண்பாடு, சமுதாய நிலை, பொருளாதார நிலை போன்ற பல பெரும் பிரிவுகளை வெளிப்படுத்துவதன் வாயிலாக மொழிக்கூறுகளுக்கும் சமுதாயக் கூறுகளுக்குமிடையே தொடர்புகளை ஏற் படுத்துகின்றது. அந்தவகையில் சமூகத்தினது மொழிப்பிரயோகங்களானவை குறித்த இடத் தினது சமுதாயச் சிக்கல்களையும் மக்களது வாழ்வியலுக்கான சவால்களையும் நன்கே வெளிக்கொணர்வதனை அண்மைக்கால மக்களால் ஆர்ப்பாட்டக் களங்களில் காட்சிப் படுத்தப்படுகின்ற பதாகைகளின் வாசகங்கள் ஊடாக அவதானிக்க முடிகிறது.

மொழி என்பது கற்றல் - கற்பித்தல் என்கின்ற தளத்திலிருந்து சமூகப்பயன்பாட்டுத் தளத் திற்கு வருகின்ற பொழுது அதன் பிரயோ கங்கள் சமூகச்சூழ்நிலைகளின் அடிப்படை யில் பல்வேறு விதங்களில் பிரயோகிக்கப் படுகின்றன. அந்த வகையில் அண்மைக் காலங்களில் இடம்பெற்று வரும் ஆர்ப்பாட் டங்களில் பயன்படுத்தப்படுகின்ற பதாகை களில் இடம்பெறும் தமிழ் மொழிப் பிரயோ கங்களானவை தமிழின் இலக்கண கட் டமைப்பு நடைகளிலிருந்து வேறுபட்டமை கின்றன. எனவே, ஆர்ப்பாட்டப் பதாகை களில் பயன்படுத்தப்படுகின்ற தமிழ் மொழி நடைப்பிரயோகங்கள் மற்றும் அவை வெளிப் படுத்தும் குறித்த சூழ்நிலைசார் சமூக மனப் பாங்கின் தொனிப்பொருள்கள் போன்ற வற்றை ஆய்வு செய்து தமிழ் மொழிபேசும் சமூகத்தினுடனான மொழியியல் பிணைப்பு களை ஆவணப்படுத்துதல் என்பது மொழி மாற்றங்கள் விரைவாக ஏற்பட்டுவரும் கால கட்டத்தில் மிக அவசியமானதொன்றாகும். இவற்றிற்கமைய இவ்வாய்வின் ஊடாக தற் காலத்தில் தமிழ் மொழிபேசும் சமூகப்பிரி வினரது சமூகச்சூழ்நிலையின் பாற்பட்ட நெகிழ்ச்சியான மொழி வெளிப்பாடுகளை யும், மொழியில் ஏற்பட்டுள்ள கட்டமைப்பு மாற்றங்களையும் ஆவணப்படுத்த முடிந் துள்ளது. ஒரு மொழியானது குறித்த சமூ கத்தின் கருத்துப்பரியாற்றத்திற்கு அனைத் துத் துறைசார்ந்தும் ஈடுகொடுக்கக் கூடியள விற்கு எளிமையானதாக ஆற்றல் மிகுந் திருக்கும் போதுதான் அம்மொழியுடன் ஒன் றித்திருக்கும் சமூகமும் வளர்ச்சியடைய முடியும். அவ்வகையில் தமிழ் மொழியின் சமூகம் சார்ந்த நெகிழ்ச்சிப்போக்கினை பதிவு செய்வதன் மூலம் தமிழ் சமூகத்தினது சமு தாய - மொழியியலின்பாற்பட்ட கூட்டிணை வினை எடுத்துக்காட்ட முடிந்துள்ளது.

ஆய்வுப் பிரச்சினையும் வினாக்களும்

இலக்கிய மீளாய்வின் அடிப்படையில், பதாகை மொழிவழக்குகளை மையப்படுத்தி அரசறிவியல் மற்றும் சமூகவியல் புலம் சார்ந்து ஆய்வுகள் இடம்பெற்றுள்ள அதே வேளை தமிழ் மொழிநடைப்பிரயோகங்கள் சார்ந்து தமிழ் இலக்கண, இலக்கிய தளங் களில் நின்று பல்வேறு ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டுள்ள போதிலும் ஆர்ப்பாட் டக்களங்களில் பிரயோகிக்கப்படுகின்ற பதா கைகளின் மொழிநடைக்கட்டமைப்பு பற்றி குறிப்பாக தற்கால தலைமுறையினருடைய மனவெழுச்சிகளின் வெளிப்பாடாக அமை கின்ற பதாகை மொழிவழக்குகளின் கட்ட மைப்புகள் மீதான ஆய்வுகளின் பற்றாக் குறையானது தமிழ்மொழிக்கட்டமைப்பு மாற் றங்களை ஆவணப்படுத்துவதில் இடைவெளி களை ஏற்படுத்தியுள்ளன. இதன்படி இலங் கையில் கொழும்பில் 2022 பங்குனி மாத காலப்பகுதியில் இடம்பெற்ற அரகலய ஆர்ப் பாட்டக்களத்தில் தமிழ் மொழியில் காட்சிப் படுத்தப்பட்ட பதாகை வாசகங்களில் எந்த வகையான மொழிநடைகள் கட்டமைக்கப்பட் டுள்ளன?, ஆர்ப்பாட்டக்களத்தில் பதாகை வாசகங்களின் ஊடாக வெளிப்படுத்தப்படு கின்ற சமுதாயமொழியியல் மனப்பாங்குகள் எத்தகைய தொனிப்பொருள்களை முன்வைத் துள்ளன? ஆகிய ஆய்வு வினாக்களுக்கான விடையினை பெற்றுக்கொள்ளும் வகையில் ஆய்வு நோக்கங்கள் முன்வைக்கப்பட்டு பகுப் பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆர்ப்பாட்டக்களத்தில் காட்சிப் படுத்தப்பட்ட பதாகைகளில் தமிழ் மொழி நடைப் மொழிப்பிரயோகங்களை சமூதாய மொழியியல் கண்ணோட்டத்துடன் அணுகி தற்காலத் தமிழ்ச்சமூகத்தின் தமிழ்மொழி நடைக்கட்டமைப்பு விதங்களை வகைப் படுத்தி அடையாளப்படுத்துதல் என்பது ஆய் வின் பிரதான நோக்கமாகும். அதேநேரம் பதாகைகளின் மொழிநடைகள் ஊடாக வெளிப்படும் சமுதாயமொழியியல் மனப் பாங்குகளை மொழியியலின் பயனாக்க அடையாளக் கோட்பாட்டின்படி ஆராய்ந்து வெளிப்படுத்துதல் என்பது துணை நோக்க மாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இலக்கிய மீளாய்வு

லியு போயா (Liu Boya) மற்றும் சென் மின் (Chen Min) ஆகியோரால் 2021இல் வெளியிடப்பட்ட ‘Linguistic Landscape: A Study on the Slogans of Political Demonstration From the Perspective of Pragmatic Identity’ என்ற தலைப்பிலான ஆய்வில் மொழியியலின் பயனாக்க அடை யாளக் கோட்பாட்டின்படி (Theory of pragmatic identity) ‘Black Lives Matter’ என்ற தொனிப் பொருளிலான கறுப்பின மனித உரிமைத் தொடரணியில் பிரயோகிக்கப்பட்ட 30 வகை யான வாசகங்கள் ஆய்விற்கென எடுத்துக் கொள்ளப்பட்டு அவை உள்ளடக்கியுள்ள மொழியியல் இயல்புகளாக அதிகாரம், விழிப் புணர்வு, தெளிவு, வேட்கை (powerfulness, conciseness, vividness, and passion) ஆகியன கண்டறியப்பட்டு நிறுவிக்காட்டப்பட்டுள்ளது. அதாவது அரசியல் தளங்களில் சொல்லப் படுகின்ற வசனங்களானவை அவற்றின் தொடர் பாடல் விளைவுடன் ஒப்பிடப்பட்டு மொழித் தொழிற்பாடுகளும் அவற்றின் இயல்புகளும் இவ்வாய்வில் நிறுவப்பட்டுள்ளன.

Fitri Murfianti, Ranang Agung Sugihartono MfpNahuhy; 2020 இல் ‘Revolution of Poster Protest Language Styles Z Generation in Indonesia’ என்ற தலைப்பிலான ஆய்வில் ஆர்ப்பாட்டத்தின் போது மாணவர்களால் பயன்படுத்தப்பட்ட பதாகைகளில் காணப் பட்ட வேடிக்கையான வாக்கியங்கள் focus group discussion ஆய்வு முறையியலின் மூலம் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு Z தலை முறையினரது மொழிநடை உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் கண் டறியப்பட்டன. குறிப்பாக மாணவர்களுடைய சொற்தேர்வில் இன்றைய சமூக-கலாசார-தொழில் நுட்பக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றமை வெளிப்படுத்தப்பட்டுள் ளது.

Hari Windu Asrini என்பவரால் 2019 இல் மேற்கொள்ளப்பட்ட Language Semiotics of Campaign Banners and Billboards of Legislative Candidates in Malang என்ற தலைப்பில் தேர்தல் வேட்பாளர்களுடைய பிரசார பதாகைகளில் காணப்படும் புறக்குறி யீடுகளினூடாக வெளிப்படுத்தப்படும் செய்தி கள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மக்களை கவர்வதற்கென வாக்கியங்கள், விளம்பர மொழிநடைகள், நிறங்கள், ஆடை கள், கவிதை நடைகள் என பல்வேறு மொழி சார்ந்தும், மொழி சாராதும் உத்தி முறைகள் கையாளப்படுகின்றமை பண்பியல்சார் ஆய்வு முறையினூடக கண்டறியப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

செலிம் பென் மற்றும் கசங்க (Selim Ben Said and Luanga A. Kasanga,2016) ஆகியோ ரால் மேற்கொள்ளப்பட்ட ‘The Discourse of Protest: Frames of Identity, Intertextuality and Interdiscursivity’ என்ற ஆய்வானது எகிப்த் - மல்லிகை புரட்சி (the Jasmine Revolution) மற்றும் துனிசியா - ஆரபிய வசந்தகால புரட்சி (Arab Spring Revolution) போன்றவற்றில் இடம்பெற்ற வாசகங்கள் அவதானிப்புக்குட் படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள் ளது. இதன்படி சமூக செயற்பாடுகளை ஆய்வு செய்யும் Mediated discourse analysis (MDA) அணுகுமுறையின்படி ‘TheNationalist-Patriotic frame, The Revolution and-Freedom frame, The People’s-Agency-and Power frame’ ஆகிய பிரிவுகளில் கருத்துப் பரி மாற்றல்களில் இடம்பெறும் பொருள்கள் ஆய் வுக்குட்டுத்தப்பட்டு சமூகச்செயற்பாட்டிற்கும் அதில் இடம்பெறும் வாசகங்களுக்கும் இடை யிலான உறவு ஆவணப்படுத்தப்பட்டது.

ஏற்கனவே ஆய்வாளர்களால் மொழியியல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளைப் பொருத்தவரை அவை ஆர்ப்பாட்டங்களின் மைய தொனிப்பொருளை ஆய்வுக்குட்படுத்தி அவ்வார்ப்பாட்டங்களின் அரசியல் மற்றும் சமூகவியல் செயற்பாட்டு மாற்றங்களை ஆவணப்படுத்திக்காட்டுவதிலேயே அதிக கவனம் செலுத்தியுள்ளன.

ஆய்வு முறையியல்

இலங்கையில் அரகலய ஆர்ப்பாட்டக்களத்தில் தமிழ் மொழியில் காட்சிப்படுத்தப்பட்ட பதாகை மொழிவழக்குகளில் எந்தவகையான மொழிநடைகள் கட்டமைக்கப்பட்டுள்ளன?, ஆர்ப்பாட்டக்கள பதாகை வாசகங்களின் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்ற சமுதாய மொழியியல் மனப்பாங்குகள் எத்தகைய தொனிப்பொருள்களை முன்வைத்துள்ளன? ஆகிய ஆய்வு வினாக்களுக்கான விடைகளை விபரண ரீதியில் பெற்றுக்கொள்ளும் வகையில் ஆய்வுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில் சமுதாயமொழியியல் அணுகுமுறையில் ஆய்வின் மையப்பகுதிகள் பண்பியல்சார் ஆய்வுமுறையியலில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மற்றும் அடையாளங் காணப்பட்ட தொனிப்பொருள்களின் வீதங்களை பெற்றுக்கொள்வதற்காகப் புள்ளி விபர வியல்முறை பயன்படுத்தப்பட்டு முடிவுகள் விபரிக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் நோக்கத்தின் அடிப்படையிலான தரவு சேகரிப்பு முறையின் அடிப்படையில் (Purposive sampling method) தரவுகளானவை ஆர்ப்பாட்டக்களத்தில் காட்சிப்படுத்தப்பட்ட 50 (தமிழ் மொழி மற்றும் தமிழ் மொழிகலந்து எழுதப் பட்டிருந்த) பதாகைகளின் புகைப்படப்பிரதிகள் லங்காஸ்ரீ இணையத்தள பக்கங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக்கொண்டு அவற்றில் எழுதப்பட்டிருந்த வாசகங்களின் ஊடாக மொழித்தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஏற்கனவே வெளிவந்த இவ்வாய்வுடன் தொடர்புபட்ட ஆய்வுக்கட்டுரைகள், தமிழ் இலக்கண நூல்கள், சமுதாயமொழியியல் நூல்கள், இணையத்தள செய்திகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்விற்கான பின்னணித் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

சேகரிக்கப்பட்ட தரவுகளானவை, சென் (Chen) என்பவரால் 2013 இல் முன்மொழியப்பட்ட பயனாக்க அடையாளக் கோட்பாடு (Theory of pragmatic identity) மற்றும் தமிழ் இலக்கண விதிகள் (நு:.மான்இ2000) போன்றவற்றின் அடிப்டையில் பதாகை மொழிக்கட்டமைப்புகளின் ஆழமைப்புகள் கொண்டுள்ள 12 வகையான மொழிநடைகளும், 3 வகையான தொனிப்பொருள்களும் பயனாக்க அடையாளக் கோட்பாட்டின் பிரயோகத்தின் படி கண்டறியப்பட்டு அவை உள்ளடக்க பகுப்பாய்வின் மூலம் (content analysis method) அதாவது உரைத்தரவுகளின் உள்ளடக்கங்களானவை அகவய ரீதியாக அவற்றின் குறியீட்டாக்கம் மற்றும் கருப்பொருள்களை அடையாளம் காணுதல் எனும் முறையான வகைப்படுத்தல் செயல்முறையின் ஊடாக (Hsieh&Shannon,2005) விபரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் கண்டறியப்பட்ட 3 வகையான தொனிப்பொருள்களின் வீதம் excel முறையின் ஊடாக பகுப்பாராய்ந்து பதிவிடப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்களங்களில் பதாகை வாசகங்கள்: கருத்தியல் கட்டமைப்பு

அலெக்ஸ் ஸ்கார் (skarr, 2020) என்பவர் 'The Language of Revolt: An Analysis of the Role of Language in Social Movements' என்ற தலைப்பிலான சமூக இயக்கத்திற்கான மொழியின் பங்கு பற்றிய ஆய்வில் சமூக இயக்க நகர்வுகளின் போது சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் அங்கு பதாகைகளில் பயன்படுத்தப்படுகின்ற மொழி வழக்குகள் எவ்வாறு ஆக்கபூர்வமாக செயற்படுகிறது என்பதற்கான காரணிகளை முன்வைத்துள்ளார். அந்த வகையில் சமூக மாற்றத்திற்கான ஆர்ப்பாட்டக்களங்களில் பிரயோகிக்கப்படுகின்ற ஆர்ப்பாட்ட மொழி வழக்கு (Protest language) என்பது சமூக மற்றும் அரசியல் இயக்க நடவடிக்கைகளின் போது குறித்த தரப்பினருடனான கருத்து வேறுபாட்டினை, அதிருப்தியினை தெரியப்

படுத்துவதற்கான உத்திமுறைகளை உள்ளடக்கிய கருவியாக பயன்படுத்தப்படும் மொழி வகை என நிர்ணயித்துக்கொள்ள முடியும். இவ்வார்ப்பாட்ட மொழிப் பயன்பாட்டின் போது சூழ்நிலைக்குரிய வாசகங்கள், வேடிக்கை வசைகள், பாடல்கள், கவிதைகள், குறியீடுகள் போன்றவற்றின் ஊடாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது மனக்குறைகளையும் மாற்றத்திற்கான கேள்விகளையும் தெரியப்படுத்துவர்.

அரசியல் ரீதியாக முன்னெடுக்கப்படுகின்ற ஆர்ப்பாட்டங்களைப் பொருத்தவரை சுருக்கமாவும் எளிதில் நினைவில் வைத்துக் கொள்ளத்தக்கவகையில் உருவாக்கப்பட்டு பதாகைகளில் எழுதப்படுகின்ற மொழி முழக்கங்கள் மிகவும் முக்கியமானவை (Hughes,2023).பதாகைகளில்எழுதப்படுகின்ற மொழிவழக்குகளை மேலோட்டமாக பார்க்கின்ற போது எளிமையானவையாக தோன்றினாலும் பிரான்ஸ், சீனா, ரஸ்யா போன்ற பல்வேறு நாடுகளில் நடந்த புரட்சிகள் முதல் அமெரிக்காவில் நடந்த குடியுரிமைப் போராட்டங்கள் வரை வரலாற்றில் மிக முக்கிய அரசியல் நிகழ்வுகளின் போது அரசியல் மற்றும் சமூக அடையாளங்களை உருவாக்குவதிலும் மாற்றத்திற்காக சமூகத்தைக் கிளர்ந்தெழ வைத்ததிலும் இவை முக்கிய பங்காற்றியுள்ளன (Hughes, 2023). 2008 இல் பராக் ஒபாமாவின் முதல் கறுப்பின ஜனாதிபதியாக்கும் பிரச்சாரத்தில் **'Yes, We Can'** என்ற நம்பிக்கையூட்டும் தொனிப் பொருள் கொண்ட பதாகை வாசகம் இது வரை இல்லாத வரலாற்று மாற்றத்தை ஏற்படுத்தியது (Hodges, 2014).

இலங்கையில் அரகலய எழுச்சி ஆர்ப்பாட்டம்

இலங்கையில் பிரபலமான அரகலய எழுச்சி ஆர்ப்பாட்டத்திற்கு முன்னதாகவே, 2019 இல் கோட்டாபய ராஜபக்ஸ ஜனாதிபதியாக பதவியேற்றதலிருந்து 2022 மார்ச் வரையில் நாடு முழுவதும் தொடர்ச்சியான போராட்டங்கள் நடந்தே வந்துள்ளன. எடுத்துக்காட்டாக: இலங்கை ஆசிரியர் தொழிற்சங்கங்களின் சம்பள முரண்பாடுகள் குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், விவசாயிகளது இரசாயன உரங்கள் தடை செய்யப்பட்டதற்கான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், ஈஸ்டர் தாக்குதல்களின் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி கத்தோலிக்க சமூகப் போராட்டம், காணாமல் போனவர்களின் குடும்பங்களது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சர்வதேச நீதியை வலியுறுத்திய ஆர்ப்பாட்டம் போன்றனவற்றைக் குறிப்பிடலாம். இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் முக்கியமாக சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் நேரடியாக பாதிக்கப்பட்ட சமூகங்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பெரும்பாலான பிரச்சினைகள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்து, அனைத்து சமூகங்களையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதித்திருந்தன. இவை அரசாங்கத்திற்கு சவால் விடுத்திருந்தாலும், அவற்றில் பொதுமக்களின் பங்கேற்பு குறிப்பிடத்தக்கதாக இருக்கவில்லை. இலங்கையில் பரவலாக இடம்பெற்ற சமகால ஆர்ப்பாட்டங்களில் பொதுமக்களின் பங்கேற்பினை பொருத்தவரை அரகலய ஆர்ப்பாட்டக்களத்தில் அவர்களது பங்கேற்பானது மூன்று மடங்கு அதிகமாக காணப்பட்டதுடன் 2022 பங்குனி மாதத்திலிருந்து ஆடிமாதம் வரையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டமாகவும் உள்ளது (Centre for Policy Alternatives, 2023).

2022 பங்குனி 31 ஆம் தேதி மாலை நுகேகொட பகுதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவின் தனிப்பட்ட இல்லத்திற்கு அருகில் நடந்த இப்பெரும் ஆர்ப்பாட்டமானது, ராஜபக்ஸ அரசாங்கத்திற்கு எதிரான கட்சி சார்பற்று தன்னார்வமாக அகிம்சை வழியில் இடம்பெற்றது. ஆரம்பத்தில் ஒரு சிலரின் அமைதியான விழிப்புணர்வுடன் தொடங்கிய இவ்வார்ப்பாட்டத்தில் பின்னர் ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் இணைந்து ஜனாதிபதியின் தனிப்பட்ட இல்லத்தை நோக்கி அணிவகுத்துச் சென்றனர். இதனைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினர், பொலிஸார் மற்றும் போராட்டக்காரர்கள் இடையே ஏற்பட்ட களேபரத்தினால் தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்களின் கவனத்தை ஈர்த்த ஒரு நிகழ்வாக இது மாறியது (Centre for Policy Alternatives, 2023). இந்த சம்பவத்

திற்கு முன்பே கோட்டாபய ராஜபக்ஸ அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் ஏற்கனவே தொடங்கி இருந்தாலும், இந்த சம்பவம் நாடு முழுவதும் உள்ள மக்களை தரமற்ற அரசாங்கத்திற்கு எதிராக குரல் கொடுக்க ஊக்குவிப்பதாக அமைந்து இலங்கை வரலாற்றில் ஒரு முக்கிய திருப்புமுனையாக இப்பாரிய ஆர்ப்பாட்டம் அமைந்தது.

அவ்வகையில் இவ்வாய்வின் பின்னணியாக இலங்கையில் 2022, பங்குனி மாதப் பகுதியில், நாட்டின் ஜனாதிபதிக்கு எதிராக அணிதிரண்ட மக்களால் கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார நெருக்கடிகளுக்கெதிரான அரகலய ஆர்ப்பாட்டக்களம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதில் தாம் பேசும் மொழியின் வாயிலாக உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கென கையிலேந்தியவாறு காட்சிப்படுத்தப்பட்ட பதாகை வாசகங்களை இவ்வாய்வானது அடிப்படையாகக்கொண்டுள்ளது. இலங்கையில் பதாகைகளை ஏந்திய பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் வழமையில் இடத்திற்கு இடம் இடம்பெறுகின்ற போதிலும் இவ்வார்ப்பாட்டமானது இலங்கையின் அனைத்திட மக்களும் இன, மத, மொழி பேதமின்றி குறித்த அரசாங்கத்தினுடைய காலகட்டத்தில் பொருளாதாரத்தை தவறாக நிர்வகித்தமை, அடுத்தடுத்த பொருளாதார நெருக்கடிகள், கடுமையான பணவீக்கம், அன்றாட தேவைகளுக்குரிய எரிபொருள், மின்சாரம் போன்றவற்றிக்கான நெருக்கடி நிலை, சடுதியாக ஏற்பட்ட பொருட்களின் விலையுயர்வு, போன்ற சூழ்நிலைகளால் ஜனாதிபதியை பதவி விலகக் கோரி மக்களால் அரச எதிர்ப்பு போராட்டம் நிகழ்த்தப்பட்டது. இதற்கென கொழும்பு காலி முகத்திடலில் திரண்ட பொது மக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், வெளிநாட்டு வாழ் இலங்கையர்கள் என பல்வேறு தரப்பினராலும் இணைந்து நடாத்தப்பட்டது. இதன் முதற்கட்ட வாசகமாக ‘Go home Gota’ என்பது பிரயோகிக்கப்பட்டதுடன் இவ்வார்ப்பாட்டத்தின் நீட்சியினால் ஆர்ப்பாட்டக் களமானது ‘Gota gama’ என்ற பெயராலும் அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது (Centre for Policy Alternatives, 2023). இத்தகைய ஆரம்பகட்ட மொழிக்கட்டமைப்பின் தூண்டுதலுடன் மக்களது உள்ளக்குமுறல்களின் வெளிப்பாடுகள் உடல் ரீதியான எவ்வித வன்முறைகளுமின்றி கோஷங்களின் ஊடாக அதற்குரிய பதாகைகளை ஏந்தியவாறு வெளிப்படுத்தப்பட்டது.

அரகலய ஆர்ப்பாட்டக்களம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், காலி முகத்திடலில் இடம்பெற்ற கோட்டா கோ கமவிற்கு சென்றுள்ளீர்களா? என்ற கேள்விக்கு கீழ்க் கண்டவாறான முடிவு பெறப்பட்டுள்ளது. அதன்படி, தமிழ் பேசும் இந்து, முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவர்களின் சென்றுள்ள வீதம் ஒப்பீட்டளவில் அதிகமாகவே காணப்படுகிறது. எனவே இவ்வார்ப்பாட்டத்தில் தமிழ் மொழியிலமைந்த பதாகை வாசகங்களை ஆய்விற்குட்படுத்தி அவற்றின் வெவ்வேறுபட்ட மொழிநடைகளையும், தொனிப்பொருள்களையும் அடையாளப்படுத்தி முன்வைப்பதென்பது சாலப்பொருத்தமானதேயாகும்.

		ஆம் (Yes)	இல்லை (No)	No response
வயது(youth old)	18 - 29 Years	15.5%	84.2%	0.3%
	Above 30 Years	8.4%	90.0%	1.6%
பால் (sex)	ஆண்(Male)	15.7%	83.3%	0.9%
	பெண்(Female)	6.3%	92.4%	1.3%
இனம் (Ethnicity)	சிங்களம்(Sinhala)	10.3%	88.9%	0.7%
	தமிழ்(Tamil)	**13.0%**	85.7%	1.3%

	மலையகத் தமிழ் (Up-Country Tamil)	**7.6%**	87.3%	5.1%
	முஸ்லிம் (Muslim)	**19.8%**	79.0%	1.2%
மதம்(Religion)	பௌத்தம் (Buddhism)	9.3%	89.9%	0.8%
	இந்து (Hinduism)	**10.8%**	86.3%	2.9%
	இஸ்லாம் (Islam)	**21.4%**	77.4%	1.2%
	கிறிஸ்தவர் (Christianity)	**23.8%**	76.2%	0.0%
	Christianity (Non-RC)	0.0%	90.0%	10.0%

(Source: A Brief Analysis of the Aragalaya, Centre for Policy Alternatives, 2023)

ஆர்ப்பாட்டக்களப் பதாகைகளில் தமிழ் மொழிநடைப்பிரயோகங்கள்

ஆர்ப்பாட்டங்கள் என்பன வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாக பதியப்படுமளவுக்கு உலகின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நடாத்தப்படுகின்ற சமூக இயக்க நடவடிக்கைகளாகும். அதேவேளை ஒவ்வொரு ஆர்ப்பாட்டங்களும் தமக்கேயுரிய தனித்துவ பிரசார வாசகங்களையும் கொண்டிருக்கும் (Said and Kasanga, 2016). அந்தவகையில் ஆர்ப்பாட்டக்களத்தில் பயன்படுத்தப்படும் பதாகைகள் என்பன சூழ்நிலைகளின் அடிப்படையில் பொருள்கொள்ளப்படுகின்றன. பொதுவாக இவை குறிப்பிட்ட செய்தியினை அல்லது விளம்பரத்தினை உள்ளடக்கிய மட்டைகளாகவே காட்சிப்படுத்தப்படுகின்றன. அதாவது ஆர்ப்பாட்டத்தின் போது அல்லது விளம்பரப்படுத்தல்களின் போது குறிப்பிட்ட செய்தியினை தெரியப்படுத்துகின்ற அல்லது விளம்பரப்படுத்துகின்ற துணி அல்லது கடதாசி மட்டைகளில் பதாகைகள் காட்சிப்படுத்தப்படுகின்றன (Merriam-Webster: https://www.merriam-webster.com/dictionary/banner). இவ்வகையில் பதாகைகளில் இடம்பெற்ற மொழிப்பிரயோகங்களை ஆய்வுக்குட்படுத்தியதன்படி 12 வகையான தமிழ் மொழிநடைக் கட்டமைப்புகளை அடையாளப்படுத்த முடிந்துள்ளது. அவையாக:

பேச்சுவழக்கில் கட்டமைக்கப்பட்ட மொழிநடைகள்: ஆர்ப்பாட்டக்களத்தில் மக்கள் தமது கைகளில் ஏந்தப்பட்டிருந்த பதாகைகளில் பேச்சு வழக்கு நடையில் மொழியினை பிரயோகித்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. அதாவது தமிழ் மொழியானது மொழிப்பிரயோகத்தில் எழுத்து வழக்கு, பேச்சு வழக்கு என்ற இரட்டை வழக்கு நிலைகளை கொண்டுள்ளது (முத்துச்சண்முகம்,2009). அவற்றில் பேச்சு வழக்கு என்பது குறிப்பிட்ட மொழி பேசும் மக்களால் தமது அன்றாட வாழ்வில் இடத்துக்கு இடம், பல்வேறு சூழ்நிலைக் காரணிகளுக்கேற்ப பல்வேறு விதமாக பேசப்படுவதாகும். இதனடிப்படையிலேயே பல்வேறு தனியாள் மொழிகளும், கிளைமொழிகளும் அடையாளப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக ஆய்வில் வினைச்சொற் கட்டமைப்புகளில் இத்தகைய பேச்சு வழக்குப் பிரயோகங்களை அவதானிக்க முடிந்துள்ளது. உதாரணங்கள்: 'அண்ணன் **இறங்குங்கோ** தம்பி **இறங்குங்கோ** காசைத் தந்திட்டுப் **போங்கோ**'(1) (யாழ்ப்பாணப்பேச்சுத்தமிழ்) இங்கு தமிழ் எழுத்துமொழிக் கட்டமைப்பின்படி -கள் என்ற உருபு இடம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக -கோ என்ற யாழ்ப்பாணப்பேச்சுத் தமிழில் பயன்படுத்தப்படும் மரியாதை உருபு பிரயோகிக்கப்பட்டுள்ளது. 'கோட்டா **தொலஞ்சு** போ'(3), 'Gota வீட்டுக்குப் போ **அடிச்ச** பணத்தை கொடுத்துட்டுப் போ'(1) இவற்றில், - ந்த், -த்த் ஆகிய எழுத்துத்தமிழ் உருபுகளுக்குப்பதிலாக முறையே -ஞ்ச், -ச்ச் ஆகிய பேச்சுத்தமிழ் உருபுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனினும் கட்டமைக்கப்பட்ட மொழிநடைகள் முழுவதுமாக தமிழின் எழுத்துமொழி அல்லது பேச்சு மொழி என்ற இரட்டை வழக்குகளில் ஒன்று மட்டுமே முழுமையாக பின்பற்றப்பட்டுள்ளது எனக் குறிப்பிட முடியாது ஏனெனில் காசு - இச்

சொல் அதிகளவு பேச்சின் போது பயன்படுத் தப்படுகிறது, பணம் - இச்சொல் அதிகளவு எழுத்துவழக்கில் பயன்படுத்தப்படுகிறது. எனவே, இங்கு இரண்டு வழக்குகளும் கலந்தே இடம்பெற்றுள்ளன. மேலும் இவ்வாச கங்கள் மக்களது இயல்பான எதிர்பார்ப்பு மனப்பாங் கினையே வெளிப்படுத்தியுள்ளன.

பிறமொழி கலப்பிலமைந்த மொழிநடைக் கட்டமைப்புகள்: போராட்டக்களத்தில் இனங் காணப்பட்ட பதாகைகளானவை தமிழ் மற்றும் பிற மொழிகளான ஆங்கிலம், சிங்களம், சீனம் மற்றும் ஜப்பான் ஆகிய மொழிகளில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் இவ் வாய்வின் நோக்கம் கருதி குறிப்பாக ஆங் கிலம் - தமிழ், ஆங்கிலம் - சிங்களம், தமிழ் - ஆங்கிலம் என்ற வரிசை முறைகளில் இரு மொழி, மும்மொழி கலந்த தொடர்கள் ஆய் வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. உதாரணங்கள்: 'Gota go gama, கோட்டா கோ கம'(2) இப்பிர யோகத்தில் இடுகுறிப்பெயர்(10) ஆங்கிலச் சொல்(10) சிங்கள மொழிச்சொல் என்ற கட்டமைப்பில் ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் இடம்பெற்றுள்ளது. 'Rajapaksha வீட்டில நாங்க இப்ப road ல'(1), 'கோட்டா A/C யில் நாட்டு மக்கள் பசியில்'(1) இவை இரண்டிலும் ஆங்கிலம்(10) தமிழ் என்ற கட்டமைப்பில் அந்தந்த மொழி களில் எழுதப்பட்டுள்ளன. 'கா... கா... கபுட்டா பசில்'(3), 'மோசடி ஒப்பந்தத்தை உடனடியாக வாபஸ் பெறுங்கள்'(2) இத் தொடர்களில் சிங்கள மற்றும் வடமொழிச் சொற்கள் தமிழில் இடம்பெற்றுள்ளன.

இத்தகைய மொழிநடைகள் மொழிக்கலப் புளாக இடம்பெற்ற பேச்சுவழக்கு நடை களாகவே கட்டமைக்கப்பட்டுள்ளன. மேலும் இவற்றின் கட்டமைப்பானது ஆங்கில எழுத் துப்பிரயோகம் - தமிழ் எழுத்துப்பிரயோகம், தமிழ் எழுத்துப்பிரயோகம் - ஆங்கில எழுத் துப்பிரயோகம் (வேற்றுமை உருபு தமிழில்), சிங்கள மொழிப்பிரயோகம் தமிழ் எழுத்துப் பெயர்ப்பில், ஆங்கிலம், தமிழ், சிங்களம் மூன்றும் தமிழ் எழுத்துப்பெயர்ப்பில் என்றவா றாக பதாகைகளில் இடம்பெற்றுள்ளன.

கட்டளை மொழிநடையிலமைந்த வாக்கிய கட்டமைப்புகள்: காட்சிப்படுத்தப்பட்ட பெரும் பாலான பதாகைகளில் குறிப்பிட்ட அரசாங் கத்தினை 'சொல்வதை செய்யுமாறு' கட்ட ளைக்கு உட்படுத்தும் தொனியிலான மொழி நடைக் கட்டமைப்புகளை அவதானிக்க முடிந் துள்ளது. உதாரணங்கள்:
'அமைச்சர்களுக்கு ஏன் விசேட சலுகை, சமமாக நடத்துவதற்கான உரிமையை உறுதி செய்'(3) 'எமக்கு வேண்டும் ஆள் மாற்றம் அல்ல ஆட்சி மாற்றம்'(2), 'போ கோட்டா போ'(2), 'அத்திவாரம் எழுப்பும் ஆசிரியர் எம்மை படுகுழியில் தள்ளாதே'(3), 'ஊடகவிய லாளர்களை தாக்குவதை நிறுத்து',(3), 'கோத்தாவை தூக்கி வெளிய போடு'(2), 'திருட்டு ராஜபக்ஸ குடும்பமே நாட்டைவிட்டு வெளியேறு'(2), 'உரிமைகளை பறித்த நீ உடனே வெளியேறு'(3) இப்பிரயோகங்களில் உறுதிசெய், வேண்டும், போ, தள்ளாதே, நிறுத்து, வெளிய போடு, வெளியேறு ஆகியவை கட்டளை வாக்கியச்சொற்களா கும். இம்மாதிரியான கட்டளை வாக்கிய கட்டமைப்புகள் மக்கள் பக்கத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட அரசாங் கத்தினைக் கேள்விக்குட்படுத்தும் ஜனநாய கத்தின் வெளிப்பாடுகளாக பிரயோகிக்கப்பட் டுள்ளன.

இலக்கியமொழிநடை தழுவிய வாக்கியக் கட் டமைப்புகள்: கையிலேந்தப்பட்டிருந்த பதா கைகளில் தமிழ் இலக்கியநடை தழுவிய மொழிப்பிரயோகங்களையும் அடையாளப் படுத்த முடிந்துள்ளது. உதாரணங்கள்: 'கண்ணீரும் ஓலமும் நிறைந்த தமிழர் வாழ்வுக்கு எப்போது விடிவு...'(3) இம்மொழி நடைக்கட்டமைப்பானது வினாவாக்கிய கட்டமைப்பில் இடம்பெற்றுள்ளதுடன் இத் தொடரில் ஓலம், விடிவு ஆகிய சொற்கள் அதிகளவு தமிழ் இலக்கியங்களில் பிர யோகிக்கப்படுகின்ற சொற்களாகும். 'வெந்து தணிந்தது காடு.... கோட்டாவை தூக்கி வெளிய போடு....'(2) இங்கு நாட்டின் வீழ்ச்சி நிலையினை வெளிப்படுத்த பாரதி யாரின் கவிதை வரி உருவகமாக பயன் படுத்தப்பட்டுள்ளதுடன் கேளிக்கை மொழி நடையில் சமூகத்தின் உள்ளக்குமுறல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கூற்றுவாக்கிய மொழிநடைக் கட்டமைப்புகள்: பதாகைகளில் தூய தமிழில் அமைந்த வாக்கிய கட்டமைப்புகள் ஊடாகவும் மக்களது எண்ணவோட்டங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. உதாரணங்கள்: 'கோட்டா - ரணில் அசுத்த கூட்டணியை விரட்டியடிப்போம்...'(3), 'ஆட்சியை விரட்டியடிப்போம் மக்கள் பலத்தை கட்டியெழுப்புவோம்' (3), 'கொள்ளையடிக்கும் பொருளாதார முறைக்கு எதிராக போராடுவோம்'(1), 'நாட்டின் இறைமையானது மக்களிடத்திலே காணப்படுகிறது.'(3), '74 வருட சாபக்கேட்டுக்கு முற்றுப் புள்ளி வைப்போம்.'(2), 'இது எங்கள் நாடு உங்கள் தனிப்பட்ட சொத்து அல்ல'(1). இங்கு காட்டப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகளின்படி தன்மை பன்மை சுட்டான 'நாம்' என்பதனை தோன்றா எழுவாயாகக்கொண்டு அதற்குரிய -ஓம் என்ற பயனிலையுடன் கூற்றுவாக்கியம் கட்டமைப்பில் மக்களது எண்ணப்பாடு வெளிப்பட்டுள்ளதுடன் இவ்வாக்கியங்கள் அனைத்துக்குமே இன-மொழி-மத வேறுபாடற்று ஒன்றிணைவதற்கான சமூகக்கோரிக்கைகள் என்ற மனப்பாங்கினையே வெளிப்படுத்தியுள்ளன.

வினாவாக்கிய மொழிநடைக் கட்டமைப்புகள்: வன்முறைகளின்றிய ஆர்ப்பாட்டக்களத்தில் கையிலேந்தப்பட்டிருந்த பதாகைகளில் மக்களுக்கு எதிரான அரசினது நடவடிக்கைகளை சுட்டிக்காட்டும் விதத்திலான வினாப்பாங்கிலான மொழிநடைகள் கட்டமைக்கப்பட்டிருந்தமையினையும் அவதானிக்க முடிந்துள்ளது. உதாரணங்கள்: 'குற்றவாளிகளுக்கு சுதந்திரம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தண்டனையா?'(3), 'உரிமைகளுக்காக போராடுவது குற்றமா?'(3), 'காக்கி அணிந்த காடையர்களுக்கு சட்டம் எங்கே?'(3) இவற்றில் தமிழ் மொழியின் வினாவாக்கியத்திற்குரிய -ஆ உருபு, எங்கே என்ற வினாச்சொல் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளது. பிரயோகிக்கப்பட்ட இத்தகைய வினாக்களின் இறுதித் தொடர்களை பொருத்தவரையில் அவை பாதிக்கப்பட்ட மக்களது இயலாமை மனப்பாங்கினை வெளிப்படுத்தும் சொற்கோர்ப்புகளாகவே அமைந்துள்ளன.

ஒலியியைபுபடுத்தப்பட்ட (rhyming) மொழிநடைக் கட்டமைப்புகள்: பதாகைகளில் வெளிப்படுத்தப்படுகின்ற மொழிப்பிரயோகங்களில் தமிழ் செய்யுள் நடைகளில் கையாளப்படுகின்ற எதுகை (ஒரு சீரில் இரண்டாவது எழுத்துகள் ஒத்து இடம்பெறுதல்), மோனை (ஒரு சீரில் முதல் எழுத்து ஒத்து வரல்) கட்டமைப்பு நடைகள் போன்ற ஒலியியைபுபடுத்தப்பட்ட கட்டமைப்புகள் இடம்பெற்றுள்ளமையை அவதானிக்க முடிந்துள்ளது. உதாரணங்கள்: 'இனவாதத்தை அழிப்போம் கோட்டாவை ஒழிப்போம்'(2), 'கோட்டாவின் சூழ்ச்சி பொருளாதார வீழ்ச்சி', 'கோட்டாவின் டொலர் திட்டம் மக்களுக்கு பொருளாதார நட்டம்'(1), 'கோட்டா A/C யில் நாட்டு மக்கள் பசியில்'(1) இவற்றில் அழிப்போம் - ஒழிப்போம், சூழ்ச்சி - வீழ்ச்சி, திட்டம் - நட்டம், A/C யில் - பசியில் என்றவாறான ஒலியியைபுபடுத்தப்பட்ட அணிகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. அதேவேளை பிற மொழிச் சொல்லும் கலந்துள்ளது. இத்தகைய ஒலியியைபுபடுத்தப்பட்ட (rhyming) சொற்களின் பிரயோகங்கள் இலகுவில் மக்களிடையே கவர்தலைப் பெற்று வலுப்படுத்தப்பட்ட கோஷங்களாக மாறியிருந்ததுடன் ஜனாதிபதியின் மீதான கடும் அதிருப்தி மனோநிலையினை சீரிய மொழிநடையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

திரைப்படப் பாணிகளைத் தழுவிய மொழிநடைக் கட்டமைப்புகள்: காட்சிப்படுத்தப்பட்ட பதாகைகளில் தென்னிந்திய தமிழ் திரைப்படங்களில் கதாநாயகர்களால் பிரயோகிக்கப்பட்ட punch dialog எனக் கூறப்படுகின்ற வலுவான வகையில் தமது எண்ணத்தை வெளிப்படுத்தும் வகையிலான சொற்றொடர்களை போராட்டக்களத்தின் நோக்கத்துடன் தொடர்புபடுத்தி பிரயோகிக்கப்பட்டுள்ளது. உதாரணங்கள்: 'பயமா இருக்கா கோட்டா sir haahaa இதுக்கு பிறகு பயங்கரமா இருக்கும் sir'(2), 'Karma is the sweat revenge' (பீஸ்ட் திரைப்படம்)(2), 'அதாறு அதாறு நீ ஒரு கோளாறு'(2) (என்னையறிந்தால் திரைப்படம்) இவை முறையே பீஸ்ட், என்னையறிந்தால் திரைப்படங்களில் இத்திரைப்பட கதாநாயகர்களான விஜய், அஜித்

ஆகியோரால் பிரயோகிக்கப்பட்டவை. இத்தகைய மொழிநடைகள் இளம் தலைமுறையினது பங்கேற்பினையும் சமூகம் மீதான ஈடுபாட்டினையும் வெளிப்படுத்தியுள்ளதுடன் ஒரு தவறான ஆட்சியியானது கீழிறக்கப்படவேண்டியது என்ற இளைஞர்களது உத்வேக மனப்பாங்கினைப் பிரதிபலிக்கின்றன.

ஆழமான பொருள்கூறும் முற்றுப்பெறா மொழிநடைக் கட்டமைப்புகள்: கூற்று வாக்கிய கட்டமைப்புகளில் அமைக்கப்பட்ட வாக்கியங்களானவை பயனிலைக்கூறு அமையாமல் முற்றுப்பெறாத கட்டமைப்பில் மொழிநடைகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. உதாரணங்கள்:
'வைத்திய சாலையில் மருந்தில்லை நோயாளிகளின் உயிர்கள் ஆபத்தில்...'(1), 'ராஜபக்ஷ வீட்டில நாங்க இப்ப ரோட்டில...'(1) பதாகைகளில் காணப்பட்ட இம்மொழிநடைகள் முறையே உள்ளன, நிற்கின்றோம் ஆகிய பயனிலைகளுடன் இடம்பெற்றிருக்க வேண்டியவை. இவைபோன்ற வாக்கிய கட்டமைப்புகள் குறித்த சூழ்நிலையில் முற்றுப்பெறாது கட்டமைக்கப்பட்டாலும் அவை பார்வையாளர்களால் புரிந்துகொள்ளக்கூடியனவாகவும் இருப்பதுடன் உயிரற்ற மட்டைகளில் உயிரோட்டம் மிகுந்த இம் முற்றும்பெறா மொழிநடைகளின் ஊடாக மக்களது துயர நிலையும், சமூகச்சூழ்நிலையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இழிபேறு பொருளிலமைந்த மொழிநடைப் பிரயோகங்கள்: மக்கள் நலனில் அக்கறையற்ற அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயலால் கோபமடைந்திருந்த மக்களது மனநிலையின் வெளிப்பாடுகளானவை இழிபேறு பொருளில் அமைந்த மொழிநடைகளூடாக பதாகைகளில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. உதாரணங்கள்: 'வேண்டாம் வேண்டாம் கோட்டா பேயே வேண்டாம்'(3), 'கா.. கா... கபுடா', '225-1 திருடர்களே வெளியேறு'(2), 'திருட்டு ராஜபக்ஷ குடும்பமே நாட்டைவிட்டு வெளியேறு'(1) இவற்றில் பேயே, கபுடா, திருடர்களே ஆகிய சொற்கள் சொற்பொருளடிப்படையில் இழிபேறுநடையில் கொடுக்கப்பட்டுள்ள உருவகங்களாகும். குறிப்பிட்ட அரசாங்கம் மீதான மக்களது அதீத எதிர்ப்பு மனப்பாங்கினையே இத்தகைய இழிவான உருவகங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயனிலையினை முன்னிறுத்திய மொழிநடைக்கட்டமைப்புகள்: பதாகைகளில் குறித்த செயலின் விளைவை முன்னிலைப்படுத்தி குறிப்பிடுவதன் நோக்கில் பயனிலைக்கூறுகளானவை வாக்கிய கட்டமைப்பின் முதல் நிலையில் எழுதப்பட்டிருப்பதனையும் பதாகைகளில் அவதானிக்க முடிந்துள்ளது. உதாரணம்: 'விழித்தெழுவோம் அனைத்து அடக்குமுறைகளுக்கும் எதிராக'(3) இவ் வாக்கிய கட்டமைப்பானது தமிழ் இலக்கண விதிமுறைகளின்படி 'நாம் அனைத்து அடக்குமுறைகளுக்கும் எதிராக விழித்தெழுவோம்' என்றவாக இடம்பெற்றிருக்க வேண்டும் எனினும் ஆர்ப்பாட்டக்களத்தின் சூழ்நிலை கருதி பயனிலைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பொதுவாக கோஷமிடல்களின்போது சொல்ல வருகின்ற விடயத்தின் பயனிலையானது ஆரம்பத்திலேயே குறிப்பிடப்படுவது என்பது வழமையான மொழி நடைக்கட்டமைப்பாகும். இம்மொழிநடையானது குறிப்பிட்ட அரசாங்கத்தினது மக்கள் நலன் கருதாத அடக்கி ஆளும் நடவடிக்கைகளுக்கு எதிராக விழித்தெழுந்தாக வேண்டிய அவசிய மனப்பாங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

எழுத்துப்பிழையான வாக்கிய கட்டமைப்புகள்: போராட்டக்களத்தில் தமிழில் இடம்பெற்றிருந்த பதாகைகளில் எழுத்துப்பிழையான வாக்கிய கட்டமைப்புகளும் ஆய்வில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணங்கள்: 'தொழிலாளர்களின் சொத்துக்கள் மோசடி சம்பளம் வளங்க முடியாதா'(1), 'எம் விதியை மாற்று எமக்கு வளி காட்டு'(3), 'முகாமைத்துவத்திற்கு எதிரான வண்முறைகளை வண்மையாக கண்டிக்கிறோம்'(2) இவற்றில் முறையே வளங்க, வளி, வண்மை ஆகிய சொற்கள் வழங்க, வழி, வன்மையாக என்றே இடம்பெற்றிருக்க வேண்டும். 'ழ்', 'ண்' ஒலிகளின் பிரயோகத்தில் எழுத்துப் பிழை இடம்பெற்றுள்ளது. இவ்வெழுத்துப் பிழைகளானவை ஆர்ப்பாட்டக்காரர்களது தமிழ்க்கிளைமொழியின் அடிப்படையிலும்,

தமிழ்மொழியின் பேச்சொலிகள் மற்றும் வரிவடிவம் தொடர்பில் விழிப்புணர்வின்மை யினால் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம்.

பயனாக்க அடையாளக்கோட்பாட்டின் பிரயோகம்

சமுதாய-மொழியியல் கண்ணோட்டத்தில் பயனாக்க அடையாளக்கோட்பாட்டின்படி - Theory of pragmatic identity (Liu, B., & Chen, M, 2021), மொழிநடைகளின் பகுப்பாய்வில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளும் மக்களது உணர்வின் வெளிப்பாடுகளானவை, 'பொருளாதார முன்னேற்றம் கருதிய தொனிப் பொருள்', 'இனத்துவ அடையாளமற்ற முழு இலங்கையருக்குமான தீர்வினைக் கருதிய தொனிப்பொருள்'. 'நீதி மற்றும் சுதந்திரமான வாழ்வு கருதிய தொனிப்பொருள்' ஆகிய மூன்று வகையான தொனிப்பொருள்களின் அடிப்படைகளில் கட்டமைக்கப்பட்டுள்ளன. கீழே கொடுக்கப்பட்டுள்ள விளக்கப்படத்தின் ஊடாக ஆர்ப்பாட்ட களத்தில் மக்களால் கையிலேந்தப்பட்ட பதாகைகளின் மொழி நடைகள் வெளிப்படுத்திய தொனிப்பொருள் கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

பயனாக்க அடையாளக் கோட்பாட்டின்படி (Theory of pragmatic identity) மொழிநடைகளின் தொனிப்பொருள்

01.	பொருளாதார முன்னேற்றம் கருதிய தொனிப்பொருள்	14 - 28%
02.	இனத்துவ அடையாளமற்ற முழு இலங்கையருக்குமான தீர்வினைக் கருதிய தொனிப்பொருள்	17 - 34%
03.	நீதி மற்றும் சுதந்திரமான வாழ்வு கருதிய தொனிப்பொருள்	19 - 38%

இத்தகைய தொனிப்பொருள்களுடன் ஆர்ப்பாட்டத்தின் மைய தொனிப்பொருளாக 'Go Home Gota' என்கின்ற வாசகம் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளிப்படுத்தப்பட்டே ஏனைய தொனிப் பொருள்களானவை மக்களது பதாகை வாசகங்கள் கொண்டிருந்த மனப்பாங்கு களின் வெளிப்பாடுகள் ஊடாக பெறப்பட் டுள்ளன.

முடிவுரை

மொழி என்பது ஒவ்வொருவரது எண்ணங் களை, உள்ளக்கிடக்கைகளை இலகுவாக ஏனையோருக்கு புரியும் வகையில் வெளிப் படுத்தும் தொடர்பாடல் கருவி என்ற வகை யில், மக்கள் எழுச்சி ஆர்ப்பாட்டக் களங் களில் வன்முறைகள் இன்றிய எண்ண வெளிப்படுத்தல்களும் சமூகப்பிரிவினரது கோரிக்கைகள், தேவைகள், மற்றும் வாழ் வின் மனோநிலைகளும் பதாகைகளில் எழுதப்படும் வாக்கியங்கள் ஊடாக காட் சிப்படுத்துகின்றன. அந்த அடிப்படையி லேயே இலங்கையில் அண்மைக்காலத்தில் பாராளுமன்றத்தினை அண்டிய பகுதியில் திரண்ட மக்கள், அரசாங்கத்தின் மீதான அதிருப்தியினை கோஷங்கள் மற்றும் பதாகைகளின் காட்சிப்படுத்தல்கள் ஊடாக வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆய்வின் நோக்கத்தில் குறிப்பிடப்பட்டதன் படி ஆர்ப்பாட்டக்களத்தில் காட்சிப்படுத்தப் பட்ட பதாகைகளில் இடம்பெற்ற மொழிநடைப் பிரயோகங்களானவை சமுதாயமொழியியல் கண்ணோட்டத்தில் உள்ளடக்கப் பகுப்பாய்வு செய்யப்பட்டு, 12 வகையான மொழி நடைக் கட்டமைப்புகள் அடையாளப்படுத்தப் பட்டுள்ளதுடன் அக்கட்டமைப்புகள் தமிழ் சமூகத்தின் சூழ்நிலைசார் மனோநிலையினை வெளிப்படுத்தியுள்ளதோடு தமிழ் இலக் கண ரீதியிலான வாக்கிய கட்டமைப்பு முறை களிலிருந்து வேறுபட்ட பாதாகைகளுக்கே யுரிய இயல்பு நடைகளைக்கொண்ட மொழி வழக்குகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆயுதம் ஏந்துதல் அற்ற ஆர்ப்பாட்டக்களங்களில் கையிலேந்தப்பட்டிருக்கும் பதாகைகளின்மொழிநடைகள்ஆர்ப்பாட்டக்காரர்களது கோரிக்கைகள் மற்றும் மனோநிலையினை கூர்மையாக வெளிப்படுத்தவல்லவைகளாக இருக்க வேண்டியது அவசியம். அந்த வகையில் இவ்வாய்வின் தரவுகளை உள்ளடக்க பகுப்பாய்வுக்குட்படுத்தியதன்படி அவை பேச்சு நடை, பிறமொழி கலப்பிலா மொழி நடை, கட்டளைநடை, இலக்கியநடை, கூற்று வாக்கிய மொழிநடை, வினாவாக்கிய மொழி நடை, எதுகை - மோனை மொழி நடை, திரைப்பட பாணிகளை தழுவிய மொழிநடை, ஆழமான பொருள் கூறும் முற்றுப்பெறா மொழிநடை, இழிபேறு பொருளிலமைந்த மொழிநடை,பயனிலையினை முன்னிறுத்திய மொழிநடை, எழுத்துப்பிழையான வாக்கிய கட்டமைப்புகள் என்றவாறான தமிழ் மொழி நடைப் பிரயோகங்கள் ஊடாக மக்களது மனோ நிலைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பயனாக்க அடையாளக்கோட்பாட்டின்படி (Theory of pragmatic identity) மொழிநடைகளை ஆய்வுக்குட்படுத்தியதன் அடிப்படையில் ஆர்பாட்டக்களத்தின் மையதொனிப் பொருளான 'Go Home Gota' என்பதற்கு மேலதிகமாக ஆர்ப்பாட்டக்களத்தில் தமிழ் மொழியில் எழுதப்பட்டிருந்த வாசகங்களில் மூன்று வகையிலான தொனிப்பொருள்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தமை புள்ளிவிபரத்துடன் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டமானது குறிப்பிட்ட துறை சார்ந்தோரால் நிகழ்த்தப்படாமல் அனைத்துத் தர மக்களாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை பதாகைகளில் அவரவர் பாங்கில் இடம்பெற்றுள்ள மொழிநடைப் பிரயோகங்கள் வெளிப்படுத்தியுள்ளன. இவை மக்களது அரசின் மீதான விரக்தி நிலையினையும், சீற்றங்களையும், தமது தேவைப்பாடுகளையும் மொழியின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளன. மேலும் தமிழ் மொழியின் எழுத்திலக்கண கட்டமைப்பினை அனுசரித்து சமூக உணர்வின் மொழி வெளிபாட்டினையும் அடையாளப்படுத்தியுள்ளன. எதிர்கால மொழியியல் ஆய்வுகள் மொழிகளின் தொழிற்பாட்டில் மொழிக்கட்டமைப்பு மாற்றங்களில் ஆழமான கவனம் செலுத்துவதுடன் மொழியின் உயிர்ப்பிற்கு பங்காற்றும் சமூகச்செயற்பாடுகளுடன் இணைந்த வெளிப்பாடுகளை மொழியியற் கூறுகளின் ஊடாக ஆய்வுக்குட்படுத்துவதன் மூலம் குறித்த மொழியின் பரந்துபட்ட சமூகப் பங்களிப்பினை மேலும் வலுப்படுத்தி மொழிப்பயன்பாட்டினை வளப்படுத்த முடியும்.

உசாத்துணைகள்

இராமமூர்த்தி, எல். (2005).மொழியும் அதிகாரமும்- தமிழ் வளர்ச்சி சிந்தனைகள். தஞ்சாவூர்: அகரம் வெளியீடு.

கருணாகரன், கி. (1975).சமுதாய மொழியியல், சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.

நு∴மான், எம். ஏ. (2000).அடிப்படைத்தமிழ் இலக்கணம். கல்முனை: வாசகர் சங்கம்.

முத்துச்சண்முகம். (2009). இக்கால மொழியியல். சென்னை: முல்லை நிலையம்.

Asrini, H. W. (2019). Language Semiotics of Campaign Banners and Billboards of Legislative Candidates in Malang. In Proceedings of the 6th International Conference on Community Development (ICCD 2019) (Advances in Social Science, Education and Humanities Research). Colombo Atlantis Press.

Centre for Policy Alternatives. (2023). Social indicator: A brief analysis of the Aragalaya. https://www.cpalanka.org/a-brief-analysis-of-the-aragalaya/ [Accessed 25 December, 2024].

Hsieh, H.-F., & Shannon, S. E. (2005). Three approaches to qualitative content analysis. Qualitative Health Research, 15(9), 1277–1288.
https://doi.org/10.1177/1049732305276687

Hodges, A. (2014). 'Yes, We Can': The social life of a political slogan. In C. Hart (Ed.), Contemporary critical discourse studies (pp. 347–365). London Bloomsbury Academic.

Lankasri, 2022. Lankasri Sri Lanka. Available at: https://lankasri.com/srilanka [Accessed March to July, 2022].

Liu, B., & Chen, M. (2021). Linguistic Landscape: A Study on the Slogans of Political

Demonstration From the Perspective of Pragmatic Identity. Shanghai, China: University of Shanghai for Science and Technology.

Murfianti, F., & Sugihartono, R. A. (2020). Revolution of poster protest language styles: Z generation in Indonesia. PalArch's Journal of Archaeology of Egypt/Egyptology, 17(8), 75-89.

Said, S. B., & Kasanga, L. A. (2016). The discourse of protest: Frames of identity, intertextuality, and interdiscursivity. In R. Blackwood, E. Lanza, & H. Woldemariam (eds.), Negotiating and contesting identities in linguistic landscapes (pp. 71–83). London: Bloomsbury Academic.

Skarr, A. (2020). The language of revolt: An analysis of the role of language in social movements [Master's thesis, University of Illinois Springfield]. ResearchGate. https://www.researchgate.net/publication/363762641_The_Language_of_Revolt_An_Analysis_of_the_Role_of_Language_in_Social_Movements (Accessed 25 December, 2024].

Hughes, N. (2023). The language of protest: Slogans and the construction of tourism contestation in Barcelona. In Research Handbook on Political Propaganda (pp. 300–314). Elgar Online. https://doi.org/10.4337/9781789906424.00028

பின்னிணைப்பு